## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 1085 / 2013 / எம்சி. 8 நாள் : 20.02.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **22.02.2013 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/உண்மை நகல்/**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - பிப்ரவரி 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் <br> ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.37, தண்ணீர்பந்தல் ரோடு "S" வளைவு பகுதி கட்டாய நில ஆர்ஜிதம் செய்து போக்குவரத்து அபிவிருத்தி செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 2 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம், வார்டு எண்.59, எஸ்.ஐ.எச்.எஸ். காலனி – இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணி – மாற்றுப்பாதை அபிவிருத்தி செய்தல் - ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 3 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம், வார்டு எண்.67, நிலையில் உள்ள ராமநாதபுரம் பகுதி திருவள்ளுவர் நகர் மற்றும் சாமா நாயுடு வீதி சாலையினை தனியார் நிலம் வழியாக திட்டச்சாலை இணைப்பு உருவாக்கம் செய்து திருச்சி சாலையுடன் இணைத்தல் - உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 4 | நகரமைப்புப் பிரிவு - மத்திய மண்டலம் - சர்வே வார்டு எண். பி, பிளாக் எண். 35, டி.எஸ் எண். 2103 ல் அமைந்துள்ள பெரிய கடைவீதி சாலைப் பகுதி-சாலை விஸ்தரிப்பு செய்ய நில ஆர்ஜிதம் செய்தல் - தேசிய நெடுஞ்சாலைத்துறையை கேட்டுக்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - உபயோகமற்ற பழைய பொருள்களை ஏலம் விடுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது –அதிக தொகை கோரியுள்ளவர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் மற்றும், குறைவாக கோரியுள்ள பொருள்களுக்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - கண்ணப்ப நகர் முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை சங்கனூர் பள்ளத்தில் 500மிமீ விட்டமுள்ள எம்.எஸ் குழாய் பதித்தல் – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக. |
| 7 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டம் - திடக்கழிவு மேலாண்மைப் பணி – சிப்பம் 5 – குப்பை சேகரிப்புப் பணிகளுக்கு தேவையான 25 எண்ணிக்கையிலான சிறியவகை டிப்பர் லாரிகள் கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டம் - திடக்கழிவு மேலாண்மைப் பணி – சிப்பம் 6 – குப்பை சேகரிப்புப் பணிகளுக்கு தேவையான 300 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்கள் மற்றும் 900 எண்ணிக்கையிலான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்களை கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | நகரமைப்புப் பிரிவு – கிழக்கு மண்டலம் - அவிநாசி சாலை விமான நிலையம் சாலை சந்திப்பு பகுதி – போக்குவரத்து மேம்பாடு – தனியார் நிலம் ஆர்ஜிதம் - சர்க்கார் புறம்போக்கு நிலம் மாவட்ட வருவாய்த் துறையிடமிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் கோருதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம், வார்டு எண்.58, நிலையிலுள்ள காமராஜர் சாலை முதல் நீலிக்கோணாம்பாளையம் பேருந்து நிலையம் வரை உள்ள பிரதான சாலை விஸ்தரிப்பு செய்தல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | பொது சுகாதாரப் பிரிவு - உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **12** | பொது சுகாதாரப் பிரிவு - உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **13** | வருவாய் பிரிவு -மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **14** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியின் உயர் நீதிமன்ற நிலை வழக்கறிஞர் திரு. சிவக்குமார் அவர்களை பணியிலிருந்து விடுவிப்பது – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| **15** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் TUFIDCO நிறுவனத்தின் கடனுதவி பெற்று வணிகப் பயன்பாட்டு கடைகள் கட்டுவதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது - TUFIDCO நிறுவனத்திலிருந்து கடனுதவி பெறப்படவில்லை – மாநகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

சமன்செய்து சீா்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோா்க் கணி.

**(குறள் - 118)**

**<u>விளக்கம்</u>**

இருபுறமும் சீராகச் சமன்செய்து எடைகாட்டும் துலாக்கோல் போலிருந்து நடுவுநிலை கெடாது ஒழுகுதல் சான்றோருக்கு அழகு.

**திருவள்ளுவா்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமாா்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவா்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணா்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்பு தீர்மானம் எண் 1

இன்றைய தினம் இரண்டு நாட்களுக்கு முன்னர் தமிழகத்தினுடைய வரலாற்றில் இதுவரை நம்மிடம் விட்டுச் சென்ற ஜுவாதார பிரச்சினையான தமிழகத்தினுடைய உரிமை காவிரிநீர் பிரச்சினைக்கு நீண்ட நெடிய காலமாக 22 ஆண்டு காலம் தொடர்ந்து மத்தியரசிடம் வாதிட்டும், நீதிமன்றத்திற்கு சென்று இடைக்கால நடுவர் ஆணையை நிறைவேற்ற வலியுறுத்தியும் இன்று நிரந்தரமாக உச்சநீதிமன்றம் சென்று தமிழகத்தினுடைய ஜுவாதார உரிமையை நீதிமன்றத்தின் மூலமாக பெற்று அதை Gazette - ல் 20ம் தேதி அன்று பதிவு செய்வதற்காக முயற்சி எடுத்த தமிழகத்தின் உரிமையைக் காக்க, இங்கிருக்கின்ற தமிழருக்கும், உலகத் தமிழருக்கும் இன்றைய தினம் பாதுகாவலராக இருந்து ஏழைமக்கள், அடித்தள மக்களுக்காக நித்தம் உழைத்து தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்காகவும், இந்திய வரலாற்றில் ஒரு முதலமைச்சர் ஒரு மாநிலத்தினுடைய உரிமையை இழந்த உரிமையை மீட்டுத் தந்து மத்திய அரசினுடைய பதிவு செய்கின்ற அளவிற்கு நீதிமன்றத்தின் மூலமாக இன்று நம்முடைய மாநிலத்தின் உரிமையைப் பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் மனிதநேயமிக்க மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இதயமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

## சிறப்பு தீர்மானம் எண் 1 நாள் 22.02.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்பு தீர்மானம் எண் 2

நாளை மறுதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய 65வது பிறந்தநாள் விழாவில் உலகம் போற்றக் கூடிய அளவிற்கு மனிதநேயமிக்க அன்னை தெரசா அமெரிக்க நாட்டினுடைய வெளியுறவு துறை அமைச்சர் மற்றவர்கள் போற்றுகின்ற வகையில் இந்தியநாடு எதிர்பார்க்கின்ற வகையில் ஒரு வல்லமையோடு மக்களோடு மக்களாக இருந்து ஏழைமக்கள் அடித்தள மக்களுக்காக நித்தம் சிந்தித்து இந்திய நாட்டினுடைய இறையான்மையோடு மனித புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய வழியில் இயக்கத்தையும் ஆட்சி நடத்தி வருங்கால இந்திய நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மாவுடைய பிறந்தநாளன்று மாநகர் மாநகராட்சி மூலமாக இதயமார்ந்த வாழ்த்துக்களை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சமர்ப்பிக்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

## சிறப்பு தீர்மானம் எண் 2 நாள் 22.02.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

### பொருள் எண் 1

**பொருள்-** கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.37, தண்ணீர்பந்தல் ரோடு “S” வளைவு பகுதி கட்டாய நில ஆர்ஜிதம் செய்து போக்குவரத்து அபிவிருத்தி உத்தேசம் நகரமைப்பு அபிவிருத்தி குழுவின் தீர்மானத்தின்படி மாமன்ற பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

**பார்வை-** வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்திரவு நாள்.12.02.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.37, தண்ணீர்பந்தல் ரோடு, விளாங்குறிச்சி ரோடு, கொடிசியா ரோடு மற்றும் காந்திமா நகர் சந்திப்பில் அபாய வளைவு மையப் பகுதியில் அமைந்துள்ள பழைய குடியிருப்புகள் நில உரிமையாளர்களிடமிருந்து கட்டாய நில ஆர்ஜிதம் செய்து, போக்குவரத்து அபிவிருத்தி செய்ய வேண்டி உள்ளது. சுற்றுப்புறம் அமைந்துள்ள விளாங்குறிச்சி, காந்திமா நகர், பீளமேடு, கணபதி, சிங்காநல்லூர் மற்றும் காளப்பட்டி பொதுமக்கள் பலலட்சம் பேர் தினசரி போக்குவரத்து நெருக்கடியிலிருந்தும், அபாய வளைவு காரணமாக ஏற்படும் தினசரி விபத்துகளிலிருந்தும் விடுபடுவதற்கு கட்டாய நில ஆர்ஜிதம் செய்து இழப்பீட்டுத் தொகை வழங்கி சாலை அபிவிருத்தி செய்யலாம். மேலும், நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை அரசு வழிகாட்டுதல் மதிப்பின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் நிலையில் உள்ள நில உரிமையாளர்கள் மற்றும் அனுபவத்தில் உள்ள மனையிடப் பரப்பு மற்றும் வசிக்கும் வீட்டின் தன்மை கீழ்கண்டவாறு உள்ளது.

| வ.எண். | நில உரிமையாளர் பெயர் | மனையிட அளவு | வீடு தன்மை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.முத்துசாமி,<br>த.பெ.நஞ்சப்பன்,<br>80/81 தண்ணீர்பந்தல் ரோடு | 39’x34’<br>1326 Sq.ft | 26’x24’<br>6’x4’<br>4’x2’ / Toilet<br>Tiled roof<br>13’x35’ | ஓட்டுவில்லை வீடு |
| 2. | திரு.ராம்தாஸ்<br>வடமேற்கு மனை<br>தண்ணீர்பந்தல் ரோடு | 40’ x 32’<br>1280 Sq.ft | 31’3’ x 13’<br>17’6”x21’0”<br>7’4’ Bath | ஓட்டுவில்லை வீடு |
| 3. | திரு.வேலுசாமி<br>தண்ணீர்பந்தல் ரோடு | 30x35’<br>1050 Sq.ft | 27’x35’<br>10’x10’ | ஓட்டுவில்லை வீடு |
| 4. | தீரு.சின்னப்பகவுண்டர்<br>தண்ணீர்பந்தல் ரோடு | 47’x26’<br>1222 Sq.ft | 37’x26’<br>10’x4’ Toilet | ஓட்டுவில்லை வீடு |
| 5. | திரு.ரங்கசாமி<br>த.பெ.பழனிசாமி<br>87/24, தண்ணீர்பந்தல் ரோடு | 20’x41’6”<br>830 Sq.ft | 20’x41’5” | ஓட்டுவில்லை வீடு |
| 6. | திரு.கந்தசாமி<br>த.பெ.கருப்புசாமி,<br>86/123, தண்ணீர்பந்தல் ரோடு | 26’x41’6”<br>1079 Sq.ft | 26’x41’6” | ஓட்டுவில்லை வீடு |
| 7. | திரு.பழனிசாமி,<br>85/119, தண்ணீர்பந்தல் ரோடு | 24’x28’<br>672 Sq.ft | 24’x28’ | ஓட்டுவில்லை வீடு |
| 8. | திரு.ராஜேந்திரன்,<br>த.பெ.பழனிசாமி,<br>தண்ணீர்பந்தல் ரோடு | 31’x25’<br>775 Sq,ft | 25’x31’ | காலியிடம் |
| 9. | திரு.நடராஜ்<br>120/95 தண்ணீர்பந்தல் ரோடு | 28’x30’<br>840 Sq.ft | 28’x30’ | ACC roof<br>ஓட்டுவில்லை ரோடு |
| 10. | திருமதி.என்.சுலோசனா<br>க.பெ.சி.கே.பழனிசாமி,<br>93/123,94/122<br>தண்ணீர்பந்தல் ரோடு | 32’x54’0”<br>1728 Sq.ft | 32’x54’ | ஓட்டுவில்லை கூரை கடை கட்டிடம், வீடு |
| 11. | திரு.வேலப்ப கவுண்டர்<br>பாப்பம்மாள்<br>92/123 தண்ணீர்பந்தல் ரோடு | 36’x40’<br>1440 Sq.ft | 36’x20’ | ஓட்டுவில்லை வீடு |
| 12. | ராமன் தண்ணீர் பந்தல் டிரஸ்ட்ஸ் | (65’+10’) x 87’<br>2<br>3262 Sq.ft | 31’35’ | தண்ணீர்பந்தல் டிரஸ்ட் கட்டிடம் ஓட்டுவில்லை. |
| 13. | கிழமேல் ரோடு | 128’x8’<br>1024 Sq.ft | | கான்கீரிட் தளம், Drain |
| 14. | தென்வடல் ரோடு | 41’x5’<br>205 Sq.ft | | மண்பாதை |

| | | |
|---|---|---|
| உத்தேச நில ஆர்ஜிதப் பரப்பளவு | - | 15,504 Sq.ft = 35.59 cents |
| அரசு வழிகாட்டுதல் மதிப்பு | - | ரூ.1000/- சதுரடி ஒன்றிற்கு |
| உத்தேச இழப்பீட்டுத் தொகை (நில உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டியது வரிசை எண். 13 மற்றும் 14 நீங்கலாக) | - | ரூ.1,55,04,000/- |

மேற்காண் தனியார் நிலங்களை கட்டாய நில ஆர்ஜிதம் செய்து நில மதிப்புத் தொகையினை உள்ளூர் திட்டக் குழுமத்தின் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று அபிவிருத்தி செய்வது தொடர்பாக நகரமைப்பு அபிவிருத்தி குழுவின் தீர்மான எண். 4 நாள்.19.02.2013-படி மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண்.1565/2013/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 378 நாள் 22.02.2013</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண் 4 நாள் 19.02.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

-------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 2

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.59, எஸ்.ஐ.எச்.எஸ். காலனி – இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணி – மாற்றுப்பாதை அபிவிருத்தி செய்தல் - ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் உத்தேசம் - நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் தீர்மான அடிப்படையில் மாமன்றப் பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை- வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்திரவு நாள்.12.02.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், ஏரோடிரம் ரோடு, SIHS காலனி இரயில்வே உயர்மட்ட மேம்பாலம் கட்டுமான பணிகள் துவக்கப்பட்டுள்ளதால், லட்சக்கணக்கான பொதுமக்கள் திருச்சிலை சாலையினை அடைவதற்கும், திருச்சி சாலையிலிருந்து SIHS காலனி செல்வதற்கும் மாற்றுப்பாதை போதுமான அளவில் இல்லை.

பொதுமக்களின் மேற்கண்ட குறையினை களையும் வகையில், ஏரோடிரம் ரோட்டில் இருந்து மேற்கு நோக்கி கங்கா நகர் 40’0’’ பாதை வழியாக மகாலட்சுமி நகர் 30 அடி அகல சாலையினை அடைந்து பின்னர் தெற்கு நோக்கி இரயில்வே கிராசிங் வழியாக நீலிக்கோணம்பாளையம் பிரதான பாதை மூலம் திருச்சி சாலை மற்றும் வரதராஜபுரம் அடையலாம்.

இப்பணிக்கு, கங்காநகர், மகாலட்சுமி நகர் பாதைகள் இணைக்கும் இடத்தில் இட்டேரி ஆக்கிரமிப்பு ‘‘மழைநீர் செல்லும் பள்ளம்’’ வடிவத்தில் உள்ள இடத்தில் மூன்று நபர்கள் ஓட்டு வீடு கட்டி நீண்டகாலமாக குடியிருந்து வருகின்றனர். இவர்கள் கூலி வேலைக்குச் செல்லும் ஏழைகள் ஆவர்.

மேலும் மேற்காண் மூன்று ஆக்கிரமிப்புதாரர்கள் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

1. திருமதி.ரேணுகா,
க.பெ.ரங்கராஜ்
34/10E, அண்ணா நகர் இட்டேரி, SIHS காலனி,
ரேஷன் கார்டு 13/G/0128189, மின் இணைப்பு எண். 993

2. திரு.விஜயன்,
54, அண்ணா நகர் இட்டேரி, SIHS காலனி,
ரேஷன் கார்டு எண்.13/G/1000141, மின் இணைப்பு எண்.041-004-1131.

3. திரு.C.வர்ணன், ஈஸ்வரி,
33/53, அண்ணா நகர் இட்டேரி, SIHS காலனி,
ரேஷன் கார்டு எண்.13/G/1000140
மின் இணைப்பு எண்.041-004-1130.

இரயில்வே கட்டுமானப் பணிகளும் நடைபெறுவதால் பொதுமக்களின் நலன்கருதி மூன்று ஓட்டுவில்லை கட்டிட ஆக்கிரமிப்புகளை அகற்றவும் மாற்று ஏற்பாடாக BSUP திட்டத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் (JNNURM) ஒதுக்கீடு வழங்கவும் மாற்றுப்பாதை அபிவிருத்தி செய்வதற்கும் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மான எண். 2 நாள். 19.02.2013-ன்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண். 1566/2013/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 379 நாள் 22.02.2013</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண் 2 நாள் 19.02.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.67, நிலையில் உள்ள ராமநாதபுரம் பகுதி திருவள்ளுவர் நகர் மற்றும் சாமா நாயுடு வீதி சாலையினை தனியார் நிலம் வழியாக திட்டச்சாலை இணைப்பு உருவாக்கம் செய்து திருச்சி சாலையுடன் இணைப்பு செய்தல், உத்தேசம் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை- வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்திரவு நாள்.12.02.2013.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.67, ராமநாதபுரம் பகுதி நிலையில் உள்ள திருவள்ளுவர் நகர் மற்றும் சாமா நாயுடு வீதி சாலையினை திட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு இணைப்பு செய்து தரும்படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு ராமநாதபுரம் பகுதி பொது மக்கள் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். இதன் அடிப்படையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் உத்திரவின் அடிப்படையில் திட்டசாலை இணைப்பு சம்பந்தமாக மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்ட வரைபடத்தின்படி திட்டசாலை எண்கள்.B1B1 மற்றும் C4C4, 40 அடி அகலத்தில் 4400 சதுரடி பரப்பளவு தனியார் நிலம் ஆர்ஜிதம் செய்து இணைப்பு செய்தால் போக்குவரத்து இடையூறு இல்லாமலும் விபத்துக்களை தடுக்கும் வகையிலும் திருச்சி சாலையினை சென்றடைய வாய்ப்பு உள்ளது.

| | | |
|---|---|---|
| உத்தேச நில ஆர்ஜித பரப்பளவு | - | 4400 சதுரடி |
| அரசு வழிகாட்டுதல் மதிப்பு | - | ரூ.4500/- சதுரடி ஒன்றுக்கு (திருச்சி ரோடு இராமநாதபுரம்) |
| உத்தேச நில ஆர்ஜித மதிப்பு | - | ரூ.1,98,00,000/- |

இதன் மூலம் ராமநாதபுரம் சுற்றுப் பகுதியில் உள்ள சுமார் 1 லட்சம் மக்கள் பயன் பெற வழி வகை உள்ளது. உத்தேச சாலை இணைப்பு இடம் ராமநாதபுரம் பகுதி திருவள்ளுவர் நகர் மற்றும் சாமா நாயுடு வீதி சாலையினை இணைக்கும் வகையில் தனியார் நிலம் வழியாக திட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு 40'0'' அடி அகலத்தில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டி உள்ளது. இச்சாலை இணைப்பு உருவாக்கம் செய்தால் திருச்சி சாலையுடன் உடனடியாக இணையும் வகையில் போக்குவரத்து அபிவிருத்தி செயல்படுத்த வழிவகை உள்ளது.

மேற்காண் தனியார் நிலம் ஆர்ஜிதம் செய்து இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும் சாலை அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கும் உரிய நிதி உதவி உள்ளூர் திட்டக் குழும உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்று செயல்படுத்த உத்தேசம் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைக்க நகரமைப்பு மற்றும் அவிவிருத்திக்குழுவின் தீர்மான எண்.5 நாள்.19.02.2013 ன்படி மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் செய்யலாம். ந.க.எண்.1470/2013/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 380 நாள் 22.02.2013</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண் 5 நாள் 19.02.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், சர்வே வார்டு எண். பி, பிளாக் எண். 35, டி.எஸ் எண். 2103 ல் அமைந்துள்ள பெரிய கடைவீதி சாலைப் பகுதி ரயில்வே பாலம் அருகில் குறுகலாக 70' அடியாகவும் மேல்புறம் ராயல் திரையரங்கு அருகில் 55' அடியாகவும் அமைந்துள்ளது. இச்சாலை ராயல் தியேட்டரின் மேல்புறம் 85'அடி சாலையாக அமைந்துள்ளது. சாலை ரயில்வே பாலத்தின் அருகில் குறுகலாக அமைந்துள்ளதால் அரசு மருத்துவமனைப் பகுதி மற்றும் கோயம்புத்தூர் ரயில் சந்திப்பு பகுதியில் இருந்து வரும் வாகனங்களுக்கு சிரமம் ஏற்பட்டு வாகன நெரிசல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க ராயல் திரையரங்கின் முன்புறம் அமைந்துள்ள சாலை அகலத்தின்படி ரயில்வே பாலம் வரை சாலையினை விஸ்தரிப்பு செய்தால் பொது மக்களுக்கும், வாகனங்களுக்கும் இடையூறுயின்றி போக்குவரத்து சீராக அமையும். மேற்கண்ட விஸ்தரிப்பு செய்ய பெரியகடை வீதியின் தென்புறம் அமைந்துள்ள தனியார் இடத்தினை 25' X 462' அடி என்ற அளவில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது. இந்த சாலை தேசிய நெடுஞ்சாலைத் துறையை சார்ந்ததாக உள்ளதால் நில ஆர்ஜிதப்பணியினை தேசிய நெடுஞ்சாலைத் துறையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் தீர்மானம் எண்.3 நாள்.19.02.2013–ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண். 1562 / 2013 / எம்.எச் 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 381 நாள் 22.02.2013</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண் 3 நாள் 19.02.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

12.12.2012ம் நாளன்று காலை 11.00 மணியளவில் இம்மாநகராட்சியின் கருத்தரங்கில் உபயோகமற்ற பழைய பொருட்களின் பொது ஏலம் நடத்தப்பட்டது. அதில் மூடி முத்திரையிடப்பட்ட (Sealed Tender) ஒப்பந்தப் புள்ளியில் '6' ஏலதாரர்கள் ஆணையாளர் பெயரில் ரூ.50,000/- க்கான வங்கி வரை வோலையுடன் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் நிறுவனம் பின்வருமாறு

1. தி/ள் எம்.எம்.ஆர் அன் கோ,
2. தி/ள் செரீப் ஸ்டீல்ஸ்
3. தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ்
4. தி/ள் வின்னர் அன் கோ
5. தி/ள் சௌத் இந்தியா டிரேடர்ஸ்
6. தி/ள் ஏ.எம்.அன்.கோ.

வாய்மொழியாக (Oral – Tender) ஏலம் கூற மொத்தம் '5' ஏலதாரர்கள் மட்டும் அதாவது மேற்படி தி/ள் ஏ.எம் அன் கோ நிறுவனத்தாரை தவிர மற்ற அனைத்து ஏலதாரர்களும் ஆணையாளர் பெயரில் ரூ.50,000/-க்கான வங்கி வரை வோலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்து கலந்து கொண்டனர்.

மேற்காண் ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் வாய்மொழி ஏலத்தொகைகளை ஒப்புநோக்கு பட்டியலிட்டு ஒப்பு நோக்கியதின் விபரம் பின் வருமாறு.

| அயிட்டம் எண் | இனம் | எடை | அரசு மதிப்பீட்டு தொகை ரூபாய் | மூடி முத்திரை இடப்பட்ட அதிகபட்ச ஏலம் எடுத்த நிறுவனம் | வாய்மொழி ஏலத்தில் அதிகபட்சத்-திற்கு ஏலம் எடுத்த நிறுவனம் | அரசு மதிப்பூட்டு தொகைக்கு அதிகம் ரூபாய் | அரசு மதிப்பீட்டு தொகைக்கு அதிக பட்ச வித்தியாசத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மின்சார கம்பங்கள் | கிலோ | 35.00 | - | தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் | 37.50 | 2.50 |
| 3 | 40 வாட்ஸ், 70 வாட்ஸ், 250 வாட்ஸ் மற்றும் 500 வாட்ஸ், உயர் கோபுர விளக்கு ஆகிய மின்சார பிட்டிங்குகள் | கிலோ | 35.00 | - | தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் | 38.50 | 3.50 |
| 4 | பிளாஸ்டிக் டேங்குகள் மற்றும் குப்பை டப்பா மூடிகள் மற்றும் இதர பிளாஸ்டிக் பொருட்கள் | கிலோ | 16.00 | - | தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் | 17.50 | 1.50 |
| 5 | ஓடுகள் மற்றும் சிமெண்ட் சீட்டுகள் | குவியல் | 5000 | தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் | – | 5000 (மதிப்பீட்டு தொகைக்கு) | 5000 (மதிப்பீட்டு தொகைக்கு) |
| 13 | எல்.ஜி.ஏர்கன்டிசன் இயந்திரம் 2 டன் மாடல் No. LMNZ 466/ZC/LCS-4 எண்ணிக்கைகள், விகார்டு வோல்டேஜ் ஸ்டேபிலைசர் மாடல் 50, 2 டன் ஏர்கன்டிசன் இயந்திரம் 200 வோல்ட் முதல் 250 வோல்ட் – 4 எண்ணிக்கைகள் | ஒட்டு மொத்தமாக | 44000 | தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் | – | 44,500.00 | 500.00 |

அயிட்டம் எண்கள் ‘1,3,4’ மற்றும் ‘13’க்கு அலுவலகம் நிர்ணயம் செய்த விலையைக் காட்டிலும் கூடுதலாக தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் நிறுவனத்தார் அவர்கள் ஏலம் எடுத்துள்ளார்கள் அயிட்டம் எண் (5)க்கு அலுவலகம் நிர்ணயம் செய்த மதிப்பீட்டு விலைக்கு தி/ள் ராஜாமணி டிரேடர்ஸ் கோரியுள்ளனர். மேற்படி பொருள்களை அதிக தொகைக்கு கோரியுள்ள ஏலதாரருக்கு ஒப்படைக்கவும் வரிசை எண்கள் ‘2’ மற்றும் ‘6 முதல் 12’ மற்றும் 14 முதல் 15 வரையும் உள்ள பொருட்களுக்கு அலுவலகம் நிர்ணயம் செய்த விலையைக் காட்டிலும் ஏலதாரர்கள் குறைவாக கோரியுள்ளார்கள் அலுவலக மதிப்பை விட குறைந்த தொகை ஏலம் கோரியுள்ள பொருள்களை மறு ஏலம் கோரவும். மாமன்றத்தின் அனுமதி வேண்டி. பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்10617/ 2011/எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 382 நாள் 22.02.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி, கண்ணப்ப நகர் முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை சங்கனூர் பள்ளத்தில் 500மிமீ விட்டமுள்ள எம்.எஸ் குழாய் பதித்தல் – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக.

------------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 14/02/2013 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப்– புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்– புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13811/2012/ எம்.டி.1 | கண்ணப்ப நகர் முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை சங்கனூர் பள்ளத்தில் 500மிமீ விட்டமுள்ள எம்.எஸ் குழாய் பதித்தல் | 64.60 | 06/02/2013 2–வது அழைப்பு | 1. தி/ள் ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்ப்ரேசன் 25.01% அதிகம்<br>2. தி/ள் கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் 29.98% அதிகம் | தி/ள் ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்ப்ரேசன் 4.95% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : வரிசை எண்.1ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.13811/2012/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 383 நாள் 22.02.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சிப்பப்பணிகளில் சிப்பம்-5 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 25 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.192.19 லட்சம் ஒதுக்கப்பட்டது. மேற்படி சிப்பப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக கடந்த 12-12-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தினா்.

1) தி/ள்.என்.எஸ்.ஆா் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை.
2) தி/ள்.ACT இந்தியா, சென்னை (A Division of Sicagen India Limited).

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 14-12-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு ஆணையா் அனுமதி வழங்கியுள்ளாா். இதனைத் தொடா்ந்து அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 21-12-2012 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனா்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் விலை ரூபாயில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | தி/ள்.என்.எஸ்.ஆா் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை | 192,19,000.00 | 201,41,500.00 | மதிப்பீட்டை விட 4.79% அதிகம் |
| 2. | தி/ள்.ACT இந்தியா, சென்னை (A Division of Sicagen India Limited). | 192,19,000.00 | 202,91,525.00 | மதிப்பீட்டை விட 5.58% அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி/ள்.என்.எஸ்.ஆா் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை ரூ.201,41,500/-க்கு (மதிப்பீட்டை விட 4.79% அதிகம்) குறைவாக கொடுத்திருந்தனா். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 26-12-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தததனைத் தொடா்ந்து மேற்படி நிறுவனம் அவா்களது 27-12-2012 தேதியிட்ட கடிதத்தில் அவா்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.201,41,500/- லிருந்து ரூ.201,25,000/-க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனா். விலை குறைப்பிற்குப் பின்னா் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.71% அதிகமாகும். இதனைத் தொடா்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 09-01-2013 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள்.என்.எஸ்.ஆா் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாா் ரூ.201,25,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னா்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.71% கூடுதலாகவுள்ளதால் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-5 ன் கீழ் எடுக்கப்பட்ட முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 25 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பா் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு தி/ள்.என்.எஸ்.ஆா் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாா் ரூ.201,25,000/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னா் மதிப்பீட்டை விட 4.71% அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9840/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீா்மானம் எண் 384 நாள் 22.02.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சிப்பப்பணிகளில் சிப்பம்-6 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 300 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்கள் மற்றும் 900 எண்ணிக்கையிலான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்களை கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.541.19 லட்சம் ஒதுக்கப்பட்டது. மேற்படி சிப்பப்பணிக்கு இரண்டாம் அழைப்பாக கடந்த 12-12-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தினா்.

1) தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை.
2) தி/ள்.ஆண்டனி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மும்பை.

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 14-12-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு ஆணையா் அனுமதி வழங்கியுள்ளாா். இதனைத் தொடா்ந்து அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 21-12-2012 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனா்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் விலை ரூபாயில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை | 541,19,000.00 | 567,16,500.00 | மதிப்பீட்டை விட 4.79% அதிகம் |
| 2. | தி/ள்.ஆண்டனி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மும்பை. | 541,19,000.00 | 612,15,000.00 | மதிப்பீட்டை விட 13.11% அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை ரூ.567,16,500/- க்கு (மதிப்பீட்டை விட 4.79% அதிகம்) குறைவாக கொடுத்திருந்தனா். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 26-12-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தததனைத் தொடா்ந்து மேற்படி நிறுவனம் அவா்களது 27-12-2012 தேதியிட்ட கடிதத்தில் அவா்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.567,16,500/- லிருந்து ரூ.565,80,000/-க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனா். விலை குறைப்பிற்குப் பின்னா் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.55% அதிகமாகும். இதனைத் தொடா்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 09-01-2013 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாா் ரூ.565,80,000/- க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னா்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.55% கூடுதலாகவுள்ளதால் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகா்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-6 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 300 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்கள் மற்றும் 900 எண்ணிக்கையிலான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS Sheet கொள்கலன்களை கொள் முதல் செய்யும் பணிக்கு தி/ள்.என்.எஸ்.ஆர் எல்கிமிட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாா் ரூ.565,80,000/- க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னா் மதிப்பீட்டை விட 4.55% அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9839/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 385 நாள் 22.02.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - அவிநாசி சாலை விமான நிலையம் சாலை சந்திப்பு பகுதி – போக்குவரத்து மேம்பாடு – தனியார் நிலம் ஆர்ஜிதம் - சர்க்கார் புறம்போக்கு நிலம் மாவட்ட வருவாய்த் துறையிடமிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் கோருதல் – மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அவினாசி சாலை, விமான நிலையம் நுழையும் சாலை எதிர்புறம் காளப்பட்டி சாலை செல்லும் சந்திப்பில் தனியார் பட்டா நிலம், காளப்பட்டி கிராமம் புல எண்.772/1A (பாகம்) 12.50 சென்ட் பரப்பளவு பட்டாதாரர் திரு.பஞ்சரத்தினம் என்பவர் பெயரில் சைக்கிள் ஸ்டேண்ட் அமைந்துள்ளது. மேலும், காளப்பட்டி கிராமம் புல எண்.772/1B (பாகம்) மாவட்ட வருவாய்த் துறைக்கு சொந்தமான சர்க்கார் புறம்போக்கு 21.50 சென்ட் பரப்பளவு சி.எஸ்.ஐ. திருச்சபையின் அனுபவத்தில் உள்ளது.

மேற்காண் 34 சென்ட் நிலப்பரப்பளவு காளப்பட்டி சாலை மற்றும் அவிநாசி சாலை சந்திப்பில் விமான நிலையம் நுழையும் பகுதியின் எதிர்புறம் பாதுகாப்பான போக்குவரத்திற்கு இடையூறாகவும் அடிக்கடி விபத்து ஏற்படும் அபாய பகுதியாகவும் விளங்கி வருகிறது. இதனால், பல இலட்சக் கணக்கான பொது மக்களுக்கு பெருமளவில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பொது மக்கள் நலன் கருதி மேற்காண் 12.50 சென்ட் பரப்பளவு தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்தும் மற்றும் 21.50 சென்ட் பரப்பளவு உள்ள புறம்போக்கு நிலத்தினை மாவட்ட வருவாய்த் துறையிடமிருந்து நில உரிமை மாற்றம் பெற்றும் Traffic island அமைக்க நடவடிக்கை எடுக்கவும் அதற்குரிய செலவினத்திற்கு உள்ளூர் திட்ட குழுமத்திடமிருந்து நிதி உதவி பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.1666/2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 386 நாள் 22.02.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம், வார்டு எண்.58, நிலையிலுள்ள காமராஜர் சாலை முதல் நீலிக்கோணாம்பாளையம் பேருந்து நிலையம் வரை உள்ள பிரதான சாலை விஸ்தரிப்பு – நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் ஒப்புதலின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுவது – தொடர்பாக.

பார்வை: திரு.கே.ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் வார்டு எண்.58 அவர்களின் மனு நாள்.19.01.2013.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.58 பகுதியில் காமராஜர் சாலையில் இஎஸ்ஐ முதல் கிழக்கு நோக்கி நீலிக்கோணாம்பாளையம் பேருந்து நிலையம் வரை நிலையில் உள்ள வரதராஜபுரம் சாலை மிகவும் குறுகலாகவும், போக்குவரத்திற்கு நெரிசலாகவும் உள்ளது. இதனால் அலுவலகம் செல்வோர், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர் மற்றும் தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இப்பகுதி மக்கள் அடர்த்தியான அளவில் வசித்து வருவதால் வாகன எண்ணிக்கைகளும் பெருமளவில் உள்ளன. இதனால் வாகனப் போக்குவரத்து அடிக்கடி நெரிசல் ஏற்படுவதுடன் விபத்தும் ஏற்படுகிறது. இந்த சாலையினை ஒட்டி நத்தம் பகுதியில் பழைய கட்டுமானங்கள் அமைந்துள்ளன. மேலும், பொது மக்களின் நலன் கருதி பிரதான பாதையினை அகலப்படுத்தும்படி மாமன்ற உறுப்பினர் வார்டு எண்.58 திரு.கே.ராஜேந்திரன் விரிவாக்கம் செய்து தரும்படி மனு சமர்ப்பித்துள்ளார்.

தற்சமயம் நிலையில் இப்பாதை 20 அடி மற்றும் 25 அடி அகலத்தில் உள்ளது. இதனை ஒட்டி நத்தம் பகுதியில் விஸ்தரிப்பு செய்து 40 அடி அகலத்தில் அபிவிருத்தி செய்தால் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தவிர்க்கலாம்.

மாமன்ற உறுப்பினர் விஸ்தரிப்பு செய்யக் கோரும் பாதை சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4ல் B3B3 திட்டச்சாலை 40 அடி அகலத்தில் நிலையில் உள்ள சாலை விஸ்தரிப்பு செய்யும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. சாலை விஸ்தரிப்பு பகுதிகள் நத்தம் பகுதியிலும் மற்றும் தனியார் நிலங்களிலும் அமைகிறது.

தனியார் நிலங்கள் இழப்பீட்டுத் தொகை வழங்கி நில எடுப்பு மேற்கொள்ளவும், நத்தம் பகுதியில் உள்ள நபர்களிடமிருந்து விஸ்தரிப்புக்கு தேவையான நிலத்தை எடுத்தும், திட்டத்தில் கண்டுள்ளவாறு B3B3 திட்டச்சாலை 40 அடி அகலத்தில் அபிவிருத்தி செய்யலாம். தனியார் நிலங்களை நில எடுப்பு மேற்கொள்வதற்கு உரிய இழப்பீட்டு தொகை மற்றும் சாலை அமைப்புத் தொகையினை உள்ளூர் திட்ட குழுமத்தின் மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று அபிவிருத்தி செய்வது தொடர்பாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் தீர்மான எண்.1, நாள்.04.02.2013 ன்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.785/2013/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 387 நாள் 22.02.2013**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண் 1 நாள் 04.02.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 72 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள்:-

| | | |
|---|---|---|
| தகுதியுடையவர்கள் | : | 71 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | : | 01 |
| மொத்தம் | : | 72 |

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் பரிந்துரையினையேற்று, மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய 71 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 772/13/எம்.இ.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 388 நாள் 22.02.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 172 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவற்றுள்:-

| | | |
|---|---|---|
| தகுதியுடையவர்கள் | : | **169** |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | : | **02** |
| தவறான முகவரி | : | **01** |
| | | ------------------ |
| மொத்தம் | : | **172** |
| | | ------------------- |

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்களின் பரிந்துரையினையேற்று, மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய **169** பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். **எண். 772/13/எம்.இ.6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 389 நாள் 22.02.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.<br>2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.07.2007.<br>3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண். 129 நாள். 22.10.2012 |

*******

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண். 147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண். 164 நாள். 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.07-ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 129 நாள். 22.10.2012-ன்படி

1. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட மாநகராட்சி வணிக வளாக கடைகளில் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுபணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யவும், மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

1. வார்டு எண். 51, பட்டேல் ரோடு வணிக வளாக கடைகள் - 30 எண்ணிக்கை
2. வார்டு எண். 52, சக்தி ரோடு –ஆம்னி பஸ்ஸ்டேண்ட் -32 எண்ணிக்கை
3. வார்டு எண். 50, ராஜிநாயுடு ரோடு (மேற்கு ) – 19 எண்ணிக்கை
4. வார்டு எண்.54-ல் காந்திபுரம் அண்ணா வணிக வளாக கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ.92.89 என நிர்ணயம் செய்யப்பட்டதை ரூ.75/- ஆக மறு நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச நிலுவை வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டு வரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119/2012 அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 390 நாள் 22.02.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியின் உயர் நீதிமன்ற நிலை வழக்கறிஞர் திரு. சிவக்குமார் அவர்களை பணியிலிருந்து விடுவிப்பது தொடர்பாக.

பார்வை : வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு நாள். **21.02.2013.**

———————

கோயம்புத்தூர் மாநகராட்சியின் உயர்நீதி மன்ற நிலை வழக்கறிஞர் திரு. சிவக்குமார்,அவர்கள் மீது **09.11.2012** அன்று மேயர் மக்கள் குறைதீர்க்கும் நாளில் புகார் கடிதம் பெறப்பட்டுள்ளது. புகார் கடிதத்தின் மீது வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இவர் மீது தொடர்ந்து புகார்கள் வருவதால் மேற்படி வழக்கறிஞரை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

எனவே இம்மாநகராட்சி உயர்நீதிமன்ற நிலை வழக்கறிஞர் திரு .சிவக்குமார் அவர்களை இப்பணியிலிருந்து விடுவிப்பது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மாமன்றத்தின் முடிவுக்கு ந.க.எண். **356/2012**/எம்.சி**10**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 391 நாள் 22.02.2013</u>**

வழக்கறிஞர் திரு. சிவக்குமார் அவர்களை கோவை மாநகராட்சியின் உயர்நீதிமன்ற நிலை வழக்கறிஞர் பணியிலிருந்து விடுவிக்க அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் : 15**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் TUFIDCO நிறுவனத்தின் கடனுதவி பெற்று வணிகப் பயன்பாட்டு கடைகள் கட்டுவதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது - TUFIDCO நிறுவனத்திலிருந்து கடனுதவி பெறப்படவில்லை – மாநகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மான எண் 245 நாள் 24.09.2012ல் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் TUFIDCO நிறுவனத்தில் கடன் உதவி பெற்று வணிக பயன்பாட்டு கடைகள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வணிக பயன்பாட்டு கடைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் TUFIDCO நிறுவனத்தில் கடன் உதவி பெறப்படாததால், இப்பணிகளின் அவசியத்தை கருதி வணிக பயன்பாட்டுக் கடைகள் கட்டுவதற்கான செலவினம் ரூ879.55 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10896/ 2012/ எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 392 நாள் 22.02.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11- ன் இணைப்பு**

| வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 25 | - | 49 | 7 | 73 | 1 | 97 | - |
| 2 | - | 26 | 8 | 50 | - | 74 | - | 98 | - |
| 3 | - | 27 | - | 51 | - | 75 | - | 99 | - |
| 4 | - | 28 | 1 | 52 | 4 | 76 | - | 100 | - |
| 5 | - | 29 | 1 | 53 | 1 | 77 | - | | |
| 6 | - | 30 | 1 | 54 | - | 78 | - | | |
| 7 | 2 | 31 | 3 | 55 | 5 | 79 | - | | |
| 8 | 3 | 32 | 1 | 56 | - | 80 | - | | |
| 9 | 1 | 33 | 2 | 57 | - | 81 | - | | |
| 10 | - | 34 | 1 | 58 | - | 82 | - | | |
| 11 | - | 35 | - | 59 | - | 83 | - | | |
| 12 | - | 36 | - | 60 | - | 84 | - | | |
| 13 | - | 37 | 2 | 61 | - | 85 | - | | |
| 14 | - | 38 | - | 62 | - | 86 | - | | |
| 15 | - | 39 | 3 | 63 | - | 87 | - | | |
| 16 | - | 40 | 6 | 64 | - | 88 | - | | |
| 17 | - | 41 | 2 | 65 | - | 89 | - | | |
| 18 | 1 | 42 | - | 66 | - | 90 | - | | |
| 19 | - | 43 | - | 67 | - | 91 | - | | |
| 20 | - | 44 | 1 | 68 | - | 92 | - | | |
| 21 | - | 45 | 5 | 69 | - | 93 | - | | |
| 22 | - | 46 | 2 | 70 | 2 | 94 | - | | |
| 23 | - | 47 | 2 | 71 | - | 95 | - | | |
| 24 | - | 48 | 2 | 72 | - | 96 | - | | |
| **Total** | **8** | | **43** | | **19** | | **1** | | |

**GRAND TOTAL - 71**

**பொருள் எண் 12- ன் இணைப்பு**

| வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. | வார்டு எண் | BPL Survey Total No. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 25 | 2 | 49 | - | 73 | - | 97 | - |
| 2 | - | 26 | - | 50 | - | 74 | - | 98 | - |
| 3 | - | 27 | - | 51 | - | 75 | 17 | 99 | - |
| 4 | - | 28 | - | 52 | - | 76 | 2 | 100 | 1 |
| 5 | - | 29 | - | 53 | - | 77 | 6 | | |
| 6 | - | 30 | - | 54 | - | 78 | 2 | | |
| 7 | - | 31 | - | 55 | - | 79 | - | | |
| 8 | - | 32 | - | 56 | 4 | 80 | - | | |
| 9 | - | 33 | - | 57 | 1 | 81 | 1 | | |
| 10 | - | 34 | - | 58 | - | 82 | 1 | | |
| 11 | - | 35 | - | 59 | 17 | 83 | 3 | | |
| 12 | - | 36 | - | 60 | - | 84 | 3 | | |
| 13 | - | 37 | - | 61 | - | 85 | 3 | | |
| 14 | - | 38 | - | 62 | - | 86 | 9 | | |
| 15 | - | 39 | 3 | 63 | 3 | 87 | 3 | | |
| 16 | 5 | 40 | - | 64 | 1 | 88 | 5 | | |
| 17 | 5 | 41 | - | 65 | 7 | 89 | 4 | | |
| 18 | - | 42 | - | 66 | - | 90 | - | | |
| 19 | - | 43 | - | 67 | 26 | 91 | - | | |
| 20 | - | 44 | - | 68 | - | 92 | 2 | | |
| 21 | - | 45 | - | 69 | - | 93 | 1 | | |
| 22 | 1 | 46 | - | 70 | 12 | 94 | 11 | | |
| 23 | - | 47 | - | 71 | - | 95 | 8 | | |
| 24 | - | 48 | - | 72 | - | 96 | - | | |
| **Total** | **11** | | **5** | | **71** | | **81** | | **1** |

**GRAND TOTAL - 169**

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி